# மாகாணக்கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

## க.பொ.த (உயர் தரம்) பயிற்சிப் பரீட்சை – 2019 – மே

## தரம் 13

**பாட இலக்கம் 32** **வணிகக்கல்வி**

## புள்ளி வழங்கும் திட்டம்

## பகுதி 1

## விடைகள்

| | |
|---|---|
| 1. 4 | 16. 2 |
| 2. 2 | 17. 1 |
| 3. 5 | 18. 2 |
| 4. 2 | 19. 4 |
| 5. 5 | 20. 4 |
| 6. 3 | 21. 5 |
| 7. 2 | 22. 4 |
| 8. 4 | 23. 5 |
| 9. 2 | 24. 1 |
| 10. 3 | 25. 3 |
| 11. 4 | 26. 1 |
| 12. 1 | 27. 2 |
| 13. 3 | 28. 5 |
| 14. 4 | 29. 4 |
| 15. 1 | 30. 2 |

(2×30=60 புள்ளிகள்)

31. (அ) தனிநபர் சிறப்புத்தேர்ச்சி, பண்டமாற்றுமுறை
    (ஆ) நிர்வாகக் கருமம், மனிதவளக் கருமம்
32. (A) கொள்கைகளை உருவாக்கல்
    (B) சட்டதிட்டங்களை உருவாக்கல்
    (C) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
    (D) வாடிக்கையாளராக செயற்படல்
33. (A) பொய்
    (B) உண்மை
    (C) பொய்
    (D) உண்மை
34. (அ) அரச துறை வணிக வங்கிகள், உத்தரவுப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்
    (ஆ) கடனட்டை, வரவட்டை
35. (A) வழங்குநர்
    (B) மொத்த வியாபாரி
    (C) சில்லறை வியாபாரி
    (D) நுகர்வாளர்
36. (அ) எண்ணக்கருவாக்கத்திறன்
    (ஆ) வருடாந்த இருப்புத் தேவைப்பாடு, அலகொன்றிற்கான பேணுதற் கிரயம்
37. (அ) ஒருங்கிணைந்த
    (ஆ) பிணையால் வரையறுத்த, இலங்கை பிணைகள் மற்றும் செலாவணி ஆணைக்குழு
38. (அ) நியமனக்கடிதம்
    (ஆ) தகுதிகாண் காலம்
39. (அ) மட்டுப்படுத்தப்பட்ட பரப்பு கணினி வலையமைப்பு (LAN)
    பரந்த பரப்பு கணினி வலையமைப்பு (WAN)
    (ஆ) இணைய வலையமைப்பு வசதி, இலத்திரனியல் அஞ்சல் வசதி

40. (அ) பேரினப் பகுப்பாய்வு
(ஆ) வணிகங்களை கூட்டுச் சேர்த்தல், வணிகத்தை கொள்வனவு செய்தல், வணிகத்தை நவீனமயப்படுத்தல் (ஏதாவது இரண்டு)

41. பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரிமை
தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை
தெரிவு செய்வதற்கான உரிமை
செவிமடுப்பதற்கான உரிமை

42. உள்ளக முயற்சியாண்மை (Internal Entrepreneurship)
பூகோள ரீதியான முயற்சியாண்மை (Global Entrepreneurship)
சமூக ரீதியான முயற்சியாண்மை (Social Entrepreneurship)
பசுமை முயற்சியாண்மை (Green Entrepreneurship)

43. கைத்தொழில் அபிவிருத்திச் சபை
ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இலங்கைத் தரக் கட்டளைகள் நிறுவனம்
தேசிய அபிவிருத்தி வங்கி
கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

44. பொது (மக்கள்) பொறுப்புக் காப்புறுதி (General Liability Insurance)
உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி (Product Liability Insurance)
ஊழியர் பொறுப்புக் காப்புறுதி (Employer Liability Insurance)

45. விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி
தொலைத்தொடர்பு, விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் காலநிலையியல்
சுகாதாரமும் மற்றும் குடித்தொகைக் கருமங்களும்
போகக்குவரத்து
மனித வள அபிவிருத்தி

46. முயற்சியாளர் (Entrepreneur)
தடைகளைக் கையாள்பவர் (Disturbance handler)
வளங்களை ஒதுக்கீடு செய்பவர் (Resource Allocator)
நடுநிலையாளர் (Nogotiator)

47. கணினி உதவியுடனான ஆக்கங்கள் / வடிவமைப்பு முறை – Computer Aided Design / CAD
கணினி உதவியுடனான உற்பத்தி முறை – Computer Aided Manufacturing / CAM
கணினியுடன் இணைந்த உற்பத்தி முறை – Computer Integrated Manufacturing / CIM
கணினிமயப்படுத்தப்பட்ட எண்மானக் கட்டுப்பாடு – Computerized Numerical Control / CNC

48. பொருளின் தன்மை
சந்தையின் தன்மை
கேள்வியின் தன்மை
போட்டியாளர்களின் விநியோக வழிமுறைகள்
உற்பத்தியாளரின் பலம்

49. மெய்நேர மொத்தத் தீர்ப்பனவு முறை (Real Time Gross Settlement System (RTGS )
பிரமைப்படுத்திய காசோலைத் தீர்ப்பனவு முறை (Image cheque clearing / Cheque Transation System (CTS)
பத்திரங்களற்ற பிணைப்பத்திரத் தீர்ப்பனவு முறை (Scriptless Securities Settlement System (SSSS)
உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான தொடர்பாடல் சங்கம் (Society for World wide Interbank financial Telecommunication (SWIFT&)

50. பதவியுயர்வு
இடமாற்றம்
விலக்குதல்.
வேலையினை முடித்தல்.

## பகுதி 11

**வினா இல 01**

1. அ) மனித தேவை:- கல்வி (01 புள்ளி)
விருப்பம்:- வணிகப்பிரிவுக் கல்வி (01 புள்ளி)
ஆ) உற்பத்தியின் தன்மை:- மூன்றாம் நிலை
உற்பத்தித் துறை:- சேவைத்துறை
நோக்க அடிப்படையில்: இலாப நோக்கமற்ற
உரிமை அடிப்படையில்:- பொதுத்துறை ($4\times1/2 = 02$ புள்ளி)

2. வாடிக்கையாளர்:- தரமான காகிதாதி, புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு
பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு
வணிகத்தின் நீண்டகால வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு
கடன்கொடுத்தோர்:- வழங்கப்பட்ட கடனை மீளப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலை அறிந்து கொள்வதற்கு
கடன் பணத்தின் பாதுகாப்பினை அறிந்து கொள்வதற்கு
வழங்குநர்:- தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு
வழங்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு
அரசு:- வரிகளை அறவிட்டுக் கொள்வதற்கு / வரிச் சலுகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு
வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு
பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அளவிடுவதற்கு
( நான்கு தரப்பினரைக் குறிப்பிட $4\times1/2 = 02$ புள்ளி)(காரணங்கள் இரண்டு வீதம் குறிப்பிட$4\times1/2 = 02$ புள்ளி)

3. **வணிகம்:**
வணிகத்தின் தன்மை என்ன? பொருள் உற்பத்தி வணிகம், சிற்றளவு வணிகம்
**வாடிக்கையாளர்:**
வாடிக்கையாளரின் கேள்விப்போக்கு, தொடர்பாடல், சமய சமூகக் கலாசாரத்துடன் தொடர்புடையவை
**ஊழியர்:**
எந்த மட்டத்திலுள்ள ஊழியர்கள், அவர்களின் சூழல், தேவைகள், விருப்பங்கள்
**போட்டியாளர்:**
போட்டியாளர் காணப்படுகின்றார்களா? அவர்கள் பின்பற்றும் ஒழுக்க விழுமியங்கள் எவை?
**சமூக கலாசாரம்:**
பல்லினச் சமூகத்தில் சனத்தொகையினுள் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கலாசார விழுமியங்கள், பெறுமானங்கள் துணைக் கலாசார விழுமியங்கள்
**அமைப்புக் கலாசாரம்:**
வணிகத்தினுள் காணப்படுகின்ற மரபுகள், பாரம் பரியங்கள், பெறுமானங்கள், பழக்கம், மனப்பாங்கு
**நடைமுறை ரீதியானது:**
ஒழுக்க விழுமிய முறையொன்றைத் தயாரிக்கும் பொழுது ஒழுக்க விழுமிய முறைமையினை நடை முறை ரீதியாகச் செயற்படுத்துவதற்கான ஆற்றல்
(நான்கு குறிப்பிட 02 புள்ளி, பொருத்தமான உதாரணங்கள் நான்கிற்கும் 02 புள்ளி)

4. அ) வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படல்.
- வணிகத்தின் நன்மதிப்பு (வணிகம் பற்றிய பிரதிவிம்பம்) விருத்தியடைதல்.
- வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுதல்.
- வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடிதல்.
- வணிகத்தின் நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றுவது இலகுவாக இருத்தல்.

($4\times1/2 = 02$ புள்ளி)

ஆ) வளப்பயன்பாடு
- மூலப்பொருள்களும் கழிவுப் பொருள் முகாமைத்துவமும்
- இடர் முகாமைத்துவம்
- இயற்கையானதும் கலாசார உரிமங்களைப் பாதுகாத்தல்

($4\times1/2 = 02$ புள்ளி)

5. அ)
1) உள்நாட்டு உற்பத்திகள் பாதிப்படைதல்
2) பொருட்கள், சேவைகளின் விலைகளில் நிலையற்ற தன்மை தோன்றி நாட்டில் பணவீக்க நிலைமை தோன்றுதல்
3) அரசு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்காது விடின் வணிக நடவடிக்கைகள் சீராக நடைபெறுவது சிரமமாக காணப்படும்.

4) போட்டித்தன்மை அதிகரித்து சந்தையில் மோசடிகள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் அதிகம் ஏற்படல்

5) சந்தை சிக்கல் தன்மை கொண்டதாக அமையும்

(மாணவர்களின் ஏனைய பொருத்தமான விடைக்கு வழங்கவும்) (4×1/2 = 02 புள்ளிகள்)

ஆ)

1) வரிக்கொடுப்பனவு
2) உள்நாட்டு வளப்பயன்பாடு
3) அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளைப் பின்பற்றுதல்
4) சட்டதிட்டங்களை பின்பற்றுதல்
5) வேலைவாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல்
6) சூழல் மாசடைவதை இழிவுபடுத்தல்

(4×1/2 = 02 புள்ளிகள்)

**வினா இல 02**

1. (அ) மத்திய வங்கி வட்டிவீதத்தைக் குறைக்கும்போது வணிக வங்கிகளின் வட்டிவீதமும் குறைவடையும். அப்போது முதலீட்டாளர்கள் வணிக வங்கிகளிலிருந்து பெறும் கடன்களின் அளவு அதிகரிப்பதுடன் முதலீடு களும் அதிகரிக்கும். அதனூடாக உற்பத்திகள் அதிகரித்து பொருட்களின் விலைகள் குறைவடையும். விலை குறைவடைவதன் காரணமாக வணிகங்களின் விற்பனைப் புரள்வு அதிகரித்து இலாபம் அதிகரிக்கும்.

(மேற் கூறிய அடிப்படையில் விளக்கம் அமைந்தால் 02 புள்ளிகள் வழங்கவும்)

(ஆ)

- போட்டித்தன்மை அதிகரித்திருப்பதனால் சந்தையில் மோசடிகள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவிருத்தல்
- சந்தையில் பொருள்கள் சேவைகள் பரவலாகக் காணப்படல்.
- சுதந்திரமான வியாபாரம் காரணமாக சந்தை சிக்கல் கொண்டதாகக் காணப்படல்.
- பூகோள மயமாதலுடன் ஏற்படக்கூடிய சமூக கலாசார சீரழிவுகள்
- சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்காக நுகர்வோர்களை அறியச் செய்வதற்கும் தேவையானதாக இருத்தல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

2. (அ) ஆம்.

இருவரும் ஆடை உற்பத்தி தொடர்பாக இரு துறைகளில் விசேட நிபுணத்துவம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இருவரும் இணையும் போது ஆடை உற்பத்தியினை சிறப்பாக மேற்கொள்ள முடியும். பங்குடைமையாக நடாத்திச் செல்லும் போது அவர்களுடைய விசேட திறன்களுக்கான அனுகூலங்களைப் பெற முடியும். (01 புள்ளி)

(ஆ)

1) பங்காளர்களின் பொறுப்புக்கள் வரையறையற்றதாகக் காணப்படல்.
2) பங்காளர்களுக்கிடையே ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகள் பங்குடைமை வணிகத்தில் பாதகமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
3) பங்காளரொருவரின் செயற்பாட்டிற்குச் சகல பங்காளர்களும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டினைக் கொண்டிருத்தல்.
4) நீண்டகால வாழ்தன்மை அற்றது.

(2×1/2 = 01 புள்ளிகள்)

(இ)

1) வணிகம் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் உதாரணம்: வணிகத்தின் பெயர், பங்காளர்களின் பெயர்களும் முகவரிகளும், வணிகத்தின் தன்மை, பங்குடைமையின் காலவரையறை.
2) மூலதனமிடல் தொடர்பான விபரம்
3) இலாப நட்டம் பகிரப்படும் முறை தொடர்பான விபரம்
4) பங்டைமையின் நோக்கம்
5) பங்காளர்களின் பற்று தொடர்பான வரையறை
6) பங்காளர்களின் மூலதன வட்டி, பற்று வட்டி தொடர்பான விபரம்
7) பங்குடைமை வணிகத்தை கலைப்பது தொடர்பான நிபந்தனைகள்
8) மேலதிக மூலதனமிடல் தொடர்பான நிபந்தனைகள்
9) புதிய பங்காளரொருவரை இணைத்துக் கொள்ளும்பொழுதும் இருக்கின்ற பங்காளர் விலகிச் செல்லும்பொழுதும் பங்களரொருவர் இறக்கும்பொழுதும் கருமமாற்ற வேண்டிய முறை தொடர்பான தகவல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

3. (அ)

1) வியாபாரம் விரிவடைவதனால் அதிக பங்கு இலாபம் பெற வாய்ப்பு ஏற்படும்.
2) பொதுமக்களுக்கு பிரசித்திபடுத்தி பங்குகளை வழங்கி பெருமளவு மூலதனம் திரட்டப்படுவதனால் தற்போதுள்ள பங்குதாரர் மேலதிக பணத்தை முதலிட வேண்டிய அவசியம் இல்லை
3) பங்குச் சந்தையில் பிரவேசிக்க முடிவதனால் பங்கு விலைகள் உயர்வடையும்போது மூலதன இலாபம் பெற முடிதல்
4) வணிகத்துக்குள்ளே பங்காளர் செல்வத்தை உச்சமாக்க முடியும்.
5) கடன் மூலதனத்தை திரட்ட கூடிய சந்தர்ப்பம் கிடைப்பதனால் தற்போதுள்ள பங்காளரின் அதிகாரங்கள் மாறாமல் அவ்வாறே வைத்துக்கொள்ள முடியும்.
6) புதிய பொதுக் கம்பனியின் பங்குகளை பெற வாய்ப்பு ஏற்படும்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1) உள்ளூராட்சி மன்றம், நகர சபை, பிரதேச சபை என்பவற்றின் கீழ் நடாத்திச் செல்லப்படும்.
2) உரிமையானது அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்துடையதாக இருத்தல்.
3) தேவையான நிதி உள்ளூராட்சி நிறுவனங்களினால் அல்லது மத்திய அரசினால் வழங்கப்படும்
4) நிர்வாகமானது உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

4. (அ) ராகுலனை முயற்சியாளராக அங்கீகரிக்க முடியும்.

ஏனெனில் தந்தை நடத்திய வணிகத்தை புதிய முறையிலான உற்பத்திகளை மேற்கொள்ளும் வணிகமாக மாற்றுகின்றார். புதிய நுட்பங்களை இனங்கண்டு உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு சமர்பிக்கின்றார். எனவே ராகுலன் புத்தாக்கம் புனைவதில் ஆர்வம் உள்ளதால் அவரை முயற்சியாளராகக் கருத முடியும். (02 புள்ளிகள்)

(ஆ)

1) ஊக்கமும், இயல்பான ஆற்றலும் காணப்படல்
2) பரீட்சித்துப் பார்த்தலில் ஈடுபடுதலும், புதியதை அறிமுகம் செய்வதில் முயற்சித்தல்
3) மற்றையவர்களுடன் அன்பாக பழகுதல்
4) புதிய வடிவமைப்புக் கொண்ட உற்பத்திகளை சமர்ப்பித்தல், புத்தாக்கம் கொண்டவர் என வெளிப்படுத்தல்
5) சூழல்நேயம் கொண்டவராகக் காணப்படல்
6) வேறு மேற்படி சம்பவத்திற்கு பொருத்தமான உதாரணங்கள்

(4×1/2 = 02 புள்ளிகள்)

5.

1) இவ்வணிகங்கள் ஊழியர் உழைப்பு கூடுதல் என்பதனால் கூடுதலான தொழில் வாய்பப்புக்களை வழங்க முடிதல்.
2) உள்நாட்டு உற்பத்தியின் விருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.
3) உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்.
4) பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதனால் நகரமயமாக்கம் காரணமாக ஏறப்டுகின்ற பிரச்சினைகள் இழிவடைதல்.
5) வருமானப் பரம்பலின் முரண்பாடுகள் குறைவடைதல்.
6) பாரிய வணிகங்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள் முடிவுப்பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல்.
7) பாரிய வணிகங்கள் ஈடுபடாத வணிகக் கருமங்களில் ஈடுபடல்.

(4×1= 04 புள்ளிகள்)

**வினா இல 03**

1. (அ)

| கேள்வி வைப்பு | நிலையான வைப்பு |
|---|---|
| 1. காசோலைப் புத்தகம் கிடைக்கும் | 1. வைப்புச் சான்றிதழ் கிடைக்கும் |
| 2. காசோலை பிறப்பிக்க அனுமதியுண்டு | 2. அனுமதியில்லை |
| 3. வங்கி மேலதிகப்பற்று வசதி பெற முடியும் | 3. கடன் வசதி பெற முடியும் |
| 4. வைப்பின் மீதிக்கு வட்டி செலுத்தப்படுவதில்லை. | 4. வைப்புக் கணக்கு மீதிக்கு வட்டி கிடைக்கும் |
| 5. வணிக வங்கிகள் மட்டுமே கேள்வி வைப்புக்களை ஏற்கும். | 5. வணிக வங்கி மட்டுமல்ல ஏனைய நிதி நிறுவனங்களும் நிலையான வைப்பை ஏற்கும். |

(2×1= 02 புள்ளிகள்)

(ஆ) **சட்டப்பணம் (Currency)**

திறைசேரி அதிகாரியின் உத்தரவின் கீழ் வெளியிடப்படுகின்ற நாணயம், நாணயத் தாள்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. சட்டப்பணமானது அங்ககரிக்கப்பட்ட பணம் எனப்படுவதுடன் இவற்றின் திரவத்தன்மையானது 100% மாகக் காணப்படும்.

உதாரணம்: குற்றி நாணயங்களும் தாள்நாணயங்களும் (01 புள்ளி)

**அண்மிய பணம் (Near money)**

சட்டப்பணத்தினைப் போன்று 100% திரவத்தன்மையைக் கொண்டிராது எனினும் பெறுமதிகேற்பப் பெறுமானத்திரட்டுக் கருமங்களை நிறைவேறற்க்கூடியதும் இலகுவாகப் பணமாக மாற்றக்கூடியதுமான சொத்துக்களாகும்.

உதாரணம்: வணிக வங்கிகளில் காணபப்படுகின்ற பொதுமக்களின் நிலையான சேமிப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், வணிகப்பத்திரங்கள்.

(01 புள்ளி)

2. (அ)
   1) ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்
   2) காப்புறுதிக் கம்பனிகள்
   3) ஊழியர் நம்பிக்கை நிதியம்
   4) சேவை வழங்குனர்களின் பொறுப்பு நிதியம்
   5) அங்கீகாரமளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் நம்பிக்கை நிதியம்
   6) அரச சேவைகள் நம்பிக்கை நிதியம்

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)
   1) அரசின் கடன் முகாமைத்துவம்
   2) வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடு
   3) சிறியளவிலான நிதியீட்டல் வேலைத்திட்டங்களுக்குக் கிராமியக் கடன் முன்மொழிவு முறைகள் தொடர்பில் தலைமை நிறுவனமொன்றாகத் தொழிற்படல்.
   4) ஊழியர் சேமலாப நிதியினை முகாமை செய்தல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

3. (அ)
   1) பிணைப்பத்திரங்களைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.
   2) நிலையியற் கட்டளையினைச் செயற்படுத்தல்.
   3) கடன் கருவிகளின் சேகரிப்பும் கொடுப்பனவும் செய்தல் ( காசோலைகளும், செலாவணி உண்டியல்களும்)
   4) மின்சாரப் பட்டியல், நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)
   1) காசோலைக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்குதல்.
   2) காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி, பெறுவோருக்கு கிடைக்கப் பெறுவதை உறுதிபட்டுத்தல்.
   3) வங்கிக் கரும பீடத்திலிருந்து பணம் எடுப்பதைத் தடுத்தல்.

(2×1 = 02 புள்ளிகள்)

4. (அ)

1) ஆயுள் காப்புறுதியில் இடர் நிச்சயமாக இருப்பதுடன் ஏனைய காப்புறுதிகளில் இடர் நிச்சயமற்ற நிலையைக் கொண்டிருக்கும்.
2) ஆயுள் காப்புறுதி தொடர்பாக இழப்பீட்டுத் தத்துவம் பொருத்தமற்றதாக இருப்பதுடன் ஏனைய காப்புறுதிகளுக்கு இத்தத்துவம் பொருத்தமானதாக இருக்கும்.
3) ஆயுள் காப்புறுதி சேமிப்பதற்கு ஒத்ததாக இருப்பதுடன், ஏனைய காப்புறுதிகளில் சேதம் ஏற்பட்டால் மட்டுமே இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தைச் சாட்டுதல் செய்ய முடியாதிருப்பதுடன் ஏனைய காப்புறுதி ஒப்பந்தங்களைச் சாட்டுதல் செய்ய முடியும்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1) பூரணமான பொறுப்புடன் கூடிய காப்புறுதி ஒப்பந்தம் / விரிவான காப்புறுதி ஒப்பந்தம்

1) 2ம் பிரிவுத் தீ மற்றும் களவபாயக் காப்புறுதி
2) குறைந்தது 3ம் பிரிவுக் காப்புறுதி (2×1 = 02 புள்ளிகள்)

5. (அ)

| அகத் தொடர்பாடல் | புறத் தொடர்பாடல் |
|---|---|
| 1) நிறுவனமொன்றினுள் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் தொடர்பாடல் இடம் பெறும். | 1) வெளிநபர்கள் மற்றும் வேறு நிறுவனங்களுடன் தொடர்பாடல் இடம்பெறும். |
| 2) தொடர்பாடல் இடம்பெறும் தடவைகளின் எண்ணிக்கை மிகக் கூடியது. | 2) தடவைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. |
| 3) அனுப்புபவர், பெறுபவருக்கான தூரம் மட்டுப்படுத்தப்பட்டது. | 3) அனுப்புபவர், பெறுபவருக்கான தூரம் அதிகமாகவிருக்கும். |

(2×1 = 02 புள்ளிகள்)

(ஆ)

1) புதிய தொடர்பாடல் உபகரணங்களைப் பயன்படுத்தல்.
2) தொடர்பாடல் தொடர்பான பல்வேறு சட்ட திட்டங்களை விதித்தல்.
3) தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணித்தல்.
4) டிஜிட்டல் (எண்மானத்) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்.
5) தொடர்பாடல் முறையில் முறையற்ற பாவனை தொடர்பாகப் புதிய சட்ட திட்டஙகளை உருவாக்கல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

**வினா இல 04**

1. (அ) இல்லை

நவீன முறையிலான பாதைகளை அமைப்பதன் மூலம் மட்டும் போக்குவரத்தின் செயற்திறனை உயர்த்திவிட முடியாது. பாதைகளை தனித்து நகர்ப்புறங்களில் மட்டும் அபிவிருத்தி செய்தால் மட்டும் போதாது. நாடு முழுவதும் கிராமப்புறங்களில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். பெருந்தெருக்களில் நெருக்கடிகள் அதிகமாகக் காணப்படுதல், காலமும் எரிபொருள் விரயமும் அதிக மட்டத்தில் காணப்படுகின்றது. குறைவான கிரயத்தில், குறைவான நேரத்தில் அதிக பாதுகாப்புடன் பயணிகளும் பொருட்களும் போக்குவரத்து செய்ய முடியுமானால் போக்குவரத்து செயற்திறனானது எனலாம்.

பாதை என்பது போக்குவரத்தின் ஒரு அம்சம் மட்டுமே, எனைய போக்குவரத்தின் மூலகங்களான சக்தி, தரிப்பிடம், ஊடகம் என்பவற்றை அபிவிருத்தி செய்தால் மட்டுமே போக்குவரத்து செயற்திறனானது எனக் கூற முடியும்.

( மேற்படி விளக்கம் அமைந்தால் 2 புள்ளிகள் வழங்கவும்)

(ஆ)

1) மூலப்பொருள்களை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்ள முடிதல்.
2) முடிவுப் பொருள்களை உரிய நேரத்திற்கு சந்தைப்படுத்த முடிதல்.
3) ஊழியரக்ளைக் குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ள முடிதல்.
4) வணிகத் தொடர்புகளைப் பேண முடிதல்.
5) சந்தையை விரிவுபடுத்த முடிதல்

(4×1/2 = 02 புள்ளிகள்)

2. (அ) களஞ்சியசாலையொன்றை நிறுவும்பொழுது கவனம் செலுத்த வேண்டியவை

1) கட்டடத்தின் தள அமைப்புத் திட்டமும் கட்டடத்தினுள் நகர்த்துவதற்கான வசதிகளும் (Layout and flow of the building)
2) பொருள்களின் பயன்பாட்டின் வேகத்திற்கேற்பக் களஞ்சியசாலையில் வளங்களை ஒதுக்குவதற்கான தேவை (Zoning and intensity of use)
3) பிரதான தொடர்புகளுக்கு அண்மித்ததாகவிருத்தல் (Proximity to major linkages)

4) பண்டங்களை இடத்திற்கிடம் மாற்றக்கூடிய திறன் (Metenial Handling Capabilities)
5) களஞ்சியப்படுத்தும் பொருள்களின் தன்மை
6) கிரயம்

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) **களஞ்சியசாலையில் பொருள்களை இடம் மாற்றுவதற்கு உபகரணங்களைப் பயன்படுத்துவதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள்**

1) களஞ்சியசாலை மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.
2) பொதி இடப்பட்ட உற்பத்திகளும் ஊழியர்களும் பாதுகாக்கப்படல்.
3) ஏற்கவேண்டிய சிரமங்களும் நேரமும் சேமிக்கப்படும்.
4) களஞ்சிய சாலையின் இடவசதிகள் மீதமாக இருத்தல்.

(2×1 = 02 புள்ளிகள்)

3. (அ) **அனுகூலங்கள்**

1) பல்வேறு உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகளைப் பெற்று உரிய வேளைகளில் இலகுவான இடத்தில் நுகர்வாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை இடம் பெறும்.
2) புதிய பொருள்கள் சேவைகளை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமையும்.
3) சந்தைத் தகவல்களை உரிய பிரிவினர்களுக்கு இலகுவாகப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருத்தல்.
4) இலகுவாகப் பரிமாற்றுச் செயல்முறை இடம்பெற உதவுதல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) **சில்லறை வியாபாரியினால் நுகர்வோர்க்கு கிடைக்கும் சேவைகள்**

1) தேவையான பொருட்களைத் தேவையான அளவில் தேவையான நேரத்திற்கு வழங்குதல்.
2) கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கல்.
3) புதிய பொருட்களை அறிமுகப்படுத்தலும், தேவையான சந்தர்ப்பங்களில் தேவையான ஆலோசனைகளை வழங்கலும்.
4) நுகர்வோரின் தேவைக்கேற்பப் பல்வேறு வகையான பொருட்களை வழங்கல்.
5) நுகர்வோருக்குப் பல்வேறு வசதிகளை வழங்கல்.
(உதாரணம்:- போக்குவரத்து வசதிகள், இலத்திரனியல் கொடுப்பனவு முறைகள்)

(2×1 = 02 புள்ளிகள்)

4. (அ) சில நாடுகள் ஒன்றிணைந்து வரி, சுங்கவரி மற்றும் வியாபாரம் தொடர்பான ஒப்பந்தமொன்றை உருவாக்கிக் கருமமாற்றும் சுதந்திர வியாபாரப் பிரதேசம் வியாபார வலயம் (Trade Bloc) என்றழைக்கப்படும். (02 புள்ளி)

ஐரோப்பிய சங்கம் (EU)
ஆசியான் அமைப்பு (ASEAN)
8 நாடுகளின் குழு (G8) (2×1 = 02 புள்ளிகள்)

5. (அ)

1) இணையத் தளத்தினூடாக கொள்வனவாளரும் விற்பனையாளரும் தொடர்பு கொள்ளல்.
2) வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கமைத்துக் கொள்ளல்.
3) பொருள்களின் கொள்வனவு விற்பனைக் கருமங்கள் இடம்பெறல்.
4) கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கொடுப்பனவுக் கருமங்களைத் தீர்த்தல்.

( படிமுறை ஒழுங்கில் நான்கும் குறிப்பிட 02 புள்ளி)

(ஆ) **இலத்திரனியல் வணிகத்தின் மட்டுப்பாடுகள்**

1) பாதுகாப்பு தொடர்பான மட்டுப்பாடுகள்
இணைய மோசடிகள் இடம்பெறுவதால் தனிப்பட்டவர்கள் விரும்புவதில்லை
2) மென்பாகங்கள் அடிக்கடி மாற்றமடைவதனால் பயன்படுத்துவோர் சிரமத்தை எதிர்கொள்ளல்
3) இலத்திரனியல் வணிகத்திற்கு பயன்படுத்தும் மென்பாகங்கள் எல்லா நாட்டுக்கும் பொதுவானதாக இல்லாமை
4) இணையவசதி பெற குறிப்பிடத்தக்க கிரயம் ஏற்படல்
5) மென்பாக பாவனையின் போதுள்ள மொழிப் பிரச்சினைகள்

**பகுதி 11**

**வினா இல 05**

1. (அ)
   1) இயங்கு வணிகச் சூழல்
   2) நிறுவனங்களும் அமைப்புக்களும்
   3) இலக்குகளும் நோக்கங்களும்
   4) வணிக வளங்கள்
   5) பயனுறுதி
   6) வினைதத்திறன்
   7) உற்பதித்திறன்
   8) செயன்முறை

(4×1/4 = 01புள்ளிகள்)

(ஆ) **தீர்மானமெடுத்தல் செயன்முறைக்குரிய படிமுறைகள்**
1) பிரச்சினையைத் தெளிவாக இனங்காணல்.
2) பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்தல்.
3) மாற்றுத் தீர்வுகளைக்கட்டியெழுப்புதல்.
4) மாற்றுத் தீர்வுகளை மதிப்பிடல். (பகுப்பாய்வு செய்தல்)
5) சிறந்த மாற்றுத் தீர்வினைத் தெரிவுசெய்தல்.
6) மாற்றுத்தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமொன்றை உருவாக்குதல் (சிறந்த தீர்வு)
7) தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல்.
8) மதிப்பீடும் மீளவலியுறுத்தலும்.

(ஆறு படிமுறைகளை ஒழுங்குமுறையில் குறிப்பிட 6×1/2 = 03புள்ளிகள்)

**2. இலட்சிய நோக்கக் கூற்றொன்றைத் தயாரிக்கும் பொழுது கவனத்திலெடுக்க வேண்டிய விடயங்கள்:**
1) இலக்கு வாடிக்கையாளர்
2) வணிகத்தின் தன்மை
3) சந்தை
4) எதிர்பார்க்கப்படும் விருத்தியும் வாழ்தன்மையும்
5) பெறுமானங்கள், நம்பகத்தன்மை, நடத்தை
6) வணிகத்தின் விசேடத்துவம் தொடர்பானது. (ஏனைய வணிகங்களிலிருந்து பிரித்தறியக்கூடிய விசேடத்துவம்)
7) மக்கள் பிரதி விம்பம்
8) சமூக சூழல் நேசிப்புத்தன்மை
9) ஊழியர்கள்
10) பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம்

(8×1/2 = 04புள்ளிகள்)

3. (அ) **நிறுவனக் கட்டமைப்பொன்றினூடாக வெளிப்படுத்தப்படும் கோட்பாடுகள்**
   1) கட்டளையிடலின் ஒருமைப்பாடு - Unity of Command
   2) கட்டளைச் சங்கிலி -Chain of Command
   3) கட்டுப்பாட்டு விசாலம் - Span of Contral
   4) மையப்படுத்தல் அல்லது பன்முகப்படுத்தல் - Centralization or decentralization
   5) தொழில் சிறப்புத் தேர்சசி - Job Specialization
   6) சட்டதிட்டங்களும் நடைமுறைகளும் - Rules and Procedures
   7) ஒருங்கிணைப்பு - Co-ordination
   8) பதவிவழி வரிசை - Job Hierachy

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) **கட்டுபாட்டுச் செயன்முறையின் படிமுறைகள்**
1) நியமங்களை நிறுவுதல்.
2) செயற்பரட்டு விளைவுகளை அளத்தல்
3) மாறல்களை இனங்காணல்
4) திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

(4×1/2 = 02 புள்ளிகள்)

4. (அ)

சமப்பாட்டுப் புள்ளியில் அலகுகளின் எண்ணிக்கை = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றின் பங்களிப்பு}}$

$= \frac{15000}{150}$ ⟶ 01 புள்ளி

$= 100$ அலகுகள் ⟶ 01 புள்ளி

(ஆ) **பொருள் கொள்வனவு செய்யும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்கள்**

1) உற்பத்திப் பொருள் இடத் தள அமைவு (Product Specification)
2) பொருளின் தரம்
3) விலை
4) வழங்களின் விரைவுத்தன்மையும் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையும்
5) வழங்குனரின் நம்பகதத்ன்மை
6) கட்டளைக்காலம் / முதன்மைக் காலம்
7) கொடுப்பனவு நிபந்தனைகள்

(4×1/2 = 02 புள்ளிகள்)

**5. (அ) இருப்புக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்**

1) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கருமங்களைத் தொடர்ச்சியாகப் பேணுதல்.
2) பற்றாக்குறை அல்லது மேலதிக இருப்பினைப் பேணுவதனால் ஏற்படும் செலவினை இழிவுபடுத்துதல்.
3) இயந்திராதிகள், உழைப்பு போன்ற வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளல்
4) எதிர்பாராத கேள்வி நிலைமைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) இருப்புக் கொள்வனவுக் கிரயம்
கட்டளைகளைத் தயாரிக்கும் கிரயம்
பொருள் சோதனைக் கிரயம்
பொருட்களை உட்கொண்டு வரும் கிரயம் (4×1/2 = 02 புள்ளிகள்)

**வினா இல 06**

**1. (அ) உற்பத்தித்திறனை விருத்தி செய்யக் கூடிய முறைகள்**

1) உள்ளீடுகளை நிலையாக வைத்து வெளியீடுகளை அதிகரித்தல்
2) வெளியீட்டினை நிலையாக வைத்து உள்ளீடுகளைக் குறைத்தல்.
3) உள்ளீடுகளைக் குறைத்தலும் வெளியீட்டினை அதிகரித்தலும்.
4) உள்ளீட்டைக் குறைப்பதை விடக் குறைவான வேகத்தில் வெளியீட்டினைக் குறைத்தல்
5) உள்ளீடுகளை அதிகரிப்பதை விடக்கூடிய வேகத்தில் வெளியீட்டினை அதிகரித்தல்

(4×1/2 = 02 புள்ளிகள்)

**(ஆ) வேலை உற்பத்தியின் பண்புகள்**

1) வாடிக்கையாளரின் தேவை விருப்பங்களுக்கமைய உற்பத்தி இடம்பெறல்.
2) நுகர்வோர் திருப்தியை உயர்மட்டத்தில் பேணக்கூடியதாக இருத்தல்.
3) கட்டளையினடிப்படையில் உற்பத்தி இடம்பெறுவதனால் சந்தையில் இடரற்ற நிலை காணப்படல்.

(2×1 = 02 புள்ளிகள்)

2. ஆம்,
சந்தைப்படுத்தலின் முக்கியத்துவத்தை விளக்கி கருத்து கூறல் வேண்டும்.
( நான்கு முக்கியத்துவத்தை குறிப்பிட்டு விளக்கியிருந்தால் நான்கு புள்ளிகள் வழங்கலாம்.)

( 04 புள்ளிகள்)

3. **(அ) விளைதிறன் கொண்ட சந்தைத் துண்டமாக்கலுக்கான தேவைப்பாடுகள்**

1) அளவிடக்கூடியதாக இருத்தல். (Measurable)
2) தேவையான அளவினைக் கொண்டிருத்தல். (Substantial)
3) அடைந்துகொள்ளக்கூடிய தன்மை (பிரவேசிக்கக்கூடிய தன்மை) (Accessible)
4) வேறுபடுத்தி இனங்காணக்கூடியதாக இருத்தல். (Differentiable)
5) செயற்படுதத்க்கூடியதாக இருத்தல். (Actionable) (4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) மாணவர்களால் வழங்கப்படும் பொருத்தமான சின்னப்பெயர்க்கேற்ப புள்ளி வழங்கவும்.

( 02 புள்ளிகள்)

4. **(அ) விலை குறித்தலுக்கான குறிக்கோள்கள்**
 1) சந்தையில் நிலைத்திருத்தல்/வாழ்தன்மை
 2) சமகால இலாபத்தை உச்சப்படுத்தல்.
 3) சந்தைப் பங்கை உச்சப்படுத்தல்.
 4) சந்தையின் சாரத்தை உறிஞ்சிக்கொள்ளல்.
 5) உற்பத்திப் பொருளின் தரத்தில் தலைமைத்துவம் பெறல் (4×1/2 = 02 புள்ளிகள்)

 (ஆ) வசதிப்பொருள்கள் Convenience Goods
 கடைப்பொருள்கள் Shopping Goods
 விசேட பொருள்கள் Speciality Goods
 நாடாப் பொருள்கள் Unsought Goods (4×1/2 = 02 புள்ளிகள்)

5. (அ) நிதியீட்டல் தீர்மானம்
 முதலீட்டுத் தீர்மானம் (2×1 = 02 புள்ளிகள்)

 (ஆ) மூலதனப் பாதீடு
 எதிர்காலத்தில் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் வணிக நிறுவன மொன்றிற்கு உரிமையாக இருக்கின்ற நிகழ்கால நிதியத்தை விளைதிறன் கொண்டதாக நீண்டகாலச் சொத்துக்களில் அல்லது நீண்டகாலச் செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்குத் திட்டமிடல் மூலதனப் பாதீடு ஆகும்.

( 02 புள்ளிகள்)

**வினா இல 07**

1. **நிறுவனமொன்று நிதியினை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களில் முதலீடு செய்யும்பொழுது கருத்திற் கொள்ளப்படும் விடயங்கள்**
 1) முதலீட்டின் அனுகூலங்கள்
 2) முதலீட்டின் இடர்
 3) திரவத் தன்மை
 4) சூழல் காரணிகள்
 5) நிச்சயமற்ற நிலை
 6) நிறுவனத்தின் கொள்கை
 7) முதலீட்டிற்கான கிரயம்
 8) சட்டரீதியான நிலைமை
 9) செயற்பாட்டு செயல்முறைகளில் ஏற்படுத்தும் அழுத்தம் (8×1/2 = 04புள்ளிகள்)

2. **(அ) வெளியக (புற) ரதீயிலான நிதியீட்டல் வழிமுறைகளின் அனுகூலங்கள்**
 1) பாரிய நிதிப் பெறுமானமொன்றைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
 2) வணிகத்தின் உரிமைத்துவத்தை விரிவாக்க முடிதல். உதாரணம்: சாதாரண பங்கு வழங்கல்.
 (2×1/2 = 01 புள்ளி)

 **வெளியக (புற) ரீதியிலான நிதியீட்டல் வழிமுறைகளின் வரையறைகள்**
 1) பெற்றுக்கொள்வதற்கான கிரயம் அதிகரிக்கும்.
 2) நிதியத்தைப் பெற்றுக்கொள்வது சிரமமானதாக இருக்கும்.
 3) பிணை உத்தரவாதம் தேவைப்படுதல். உதாரணம்: வங்கிக்கடன்
 4) வணிகத்தின் பொறுப்பு அதிகரிக்கும். (2×1/2 = 01 புள்ளி)

 **(ஆ) மூலதன இலாபம்**
 எவரேனும் முதலீட்டாளரொருவர் கொள்வனவு செய்த விலையைவிடக் கூடிய விலைக்குப் பங்குகளை விற்பனை செய்வாராயின் அதன் மூலம் அவர் மூலதன இலாபத்தையே பெற்றுக்கொள்கின்றார். (01 புள்ளி)

 **உதாரணம்:-** பங்கொன்று ரூபா. 10 வீதம் கொள்வனவு செய்த நபரொருவர் பங்கொன்றை ரூபா 20 இற்கு விற்பனை செய்வதாக இருப்பின் அவருக்குப் பங்கொன்றின் மூலம் ரூபா 10 மூலதன இலாபம் கிடைக்கப் பெறும். பங்குகளைச் சந்தையில் பரிமாற்றம் செய்யும் முதலீட்டாளர்களுக்கு கிடைக்கக் கூடிய கவர்ச்சிகரமான அனுகூலமே இம்மூலதன இலாபமாகும். (01 புள்ளி)

3. (அ)
 1) சேவையினை முடிவுக்குக் கொண்டுவரல்.
 2) வாய் மூலமும் எழுத்து மூலமும் எச்சரித்தல்.
 3) தகுதிகாண் காலத்தினை நீடித்தல்.
 4) ஊழியரை இடமாற்றுதல். (4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1) பயிலுநர் பயிற்சி
2) தொழில் மூலமான பயிற்சி
3) தொழிலில் ஈடுபடும் போதான பயற்சி
4) பாத்திரமேற்று நடித்தல்.
5) போலியான நடிப்பு (Simulation)
6) முகாமைத்துவ விளையாட்டு
7) உணர்வுபூர்வமான பயிற்சி (Sensitivity Training) (4×1/2 = 02 புள்ளிகள்)

4. 1. குறைகளுக்குச் சிறந்த முறையில் செவிசாய்த்தல்.
2. குறைகளுக்கும் அதனை முன்வைக்கும் ஊழியர்களுக்கும் உரியவாறு சரியான தகவல்களைச் சேகரித்தல்.
3. ஊழியரோடு அது தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
4. ஊழியரினால் வழங்கப்படும் விடயங்களுக்குச் சிறந்த முறையில் செவிசாய்த்தல்
5. ஊழியரினால் வழங்கப்படும் விடயங்கள் சரியானதாக இருப்பின் அவற்றை ஏற்றுக்கொள்ளல்.
6. ஊழியரினுள் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்.

(மேற்படி விடயங்களை உள்ளடக்கிய விளக்கத்திற்கேற்ப புள்ளி வழங்கலாம்) (04 புள்ளிகள்)

5. (அ)

1) ஊழியர் பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றல்.
2) நிறுவனத்தின் விருத்தியில் ஆர்வம் காட்டுதல்.
3) நிறுவனத்தின் இரகசியங்களை வெளியகப் பிரிவினருக்கு வழங்காதிருத்தல்.
4) நிறுவனத்தின் நன்மதிப்பினைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் (4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1) பதவியுயர்வுக்கு தடை ஏற்படல்.
2) தொழிலில் திருப்தியின்மை ஏற்படல்.
3) ஊழியர் உழைப்பு கீழ் மட்டத்திற்கு செல்லல், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாமை.
4) சில வேளைகளில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படல்.

(4×1/2 = 02 புள்ளிகள்)

**வினா இல 08**

1.

| தரவு | தகவல் |
|---|---|
| • தரவு உள்ளீடொன்றாகும். | தகவல் வெளியீடொன்றாகும். |
| • தரவினைத் தீர்மானமெடுப்பதற்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாது. | தகவலைத் தீர்மானமெடுப்பதற்கு நேரடியாப் பயன்படுத்த முடியும் |
| • தரவானது தரவாகக் காணப்படும் வரையில் பெறுமதி இல்லை. | தகவல்களுக்குப் பெறுமதி காணப்படுகின்றது. |
| • மூலப்பொருளாகக் காணப்படும் | முடிவுப் பொருளாகக் காணப்படும். |

(மேற்படி ஒப்பீடுகளுடன் கூடிய விளக்கத்திற்கு புள்ளி வழங்கலாம்) (04 புள்ளிகள்)

2. (அ) தீர்மான உதவி முறைமை - Decision Support Systems (DSS) (01 புள்ளி)

**உதாரணம்:-**

கட்டமைக்கப்பட்ட தீர்மானம் - பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைச் சமன்பாட்டிற்கமையக் கணிப்பிடல்.

பகுதிக் கட்டமைக்கப்பட்ட தீர்மானம் - முதலீட்டு மதிப்பீட்டுத் தீர்மானம் (2×1/2 = 01 புள்ளி)

(ஆ)

1) கணித்தல் தொழினுட்பம்
2) தொடர்பாடல் தொழினுட்பம்
3) தகவல் முகாமைத்துவத் தொழினுட்பம்

(மூன்றும் குறிப்பிட 02 புள்ளி, இரண்டு குறிப்பிட 01 புள்ளி, ஒன்று குறிப்பிட ½ புள்ளி)

3. (அ)

1) இலத்திரனியல் அஞ்சல் வசதிகள்
2) வெப் தளங்களைப் பார்வையிடல்
3) இணைய வலையமைப்பு உரையாடல்
4) தொலைபேசி வசதிகள்
5) கோவைப் பரிமாற்றம்
6) இலத்திரனியல் கூட்டங்கள், தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புக்களை கண்டு களிக்கும் வசதிகள்
7) ஈ-செய்திகள், ஈ-சஞ்சிகைகள், ஈ-நூல் நிலையங்கள் போன்ற வசதிகள்
8) ஈ-வைத்தியச் சேவை (4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) **செய்திக்குழு (News Group)**

ஒத்த விருப்பங்களைக் கொண்ட குழுக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வழங்கப்படுகின்ற வசதியாகும். தான் விரும்புகின்ற துறைக்காகத் தயாரிக்கப்பட்ட செய்திக் குழுவில் அங்கத்துவத்தைப் பெறுகின்றபோது இணைய வலையமைப்பினூடாக தன்னியக்க முறையில் துறையின் புதிய அறிவினையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள உதவும். (01 புள்ளி)

**தொலைக்கணினி (Tele Computing )**

ஒரு இடத்திலுள்ள கணினியொன்றினூடாக இணைய வலையமைப்புடன் தொடர்பினை ஏற்படுத்தி இன்னொரு இடத்திலுள்ள கணினியினைப் பயன்படுத்துவதற்கான வசதியை அளித்தல் தொலைக்கணினிச் சேவையாகும். இதனூடாக எவராவது ஒருவருக்கு தனது வீட்டிலுள்ள கணினியின் மூலம் பிரவேசித்துத் தனது காரியாலயத்திலுள்ள கணினியைப் பயன்படுத்த முடியும். (01 புள்ளி)

4. (அ)

1) தெளிவான எல்லை (Focus)
2) வாடிக்கையாளர் (Customers)
3) இலக்கு (Target/goal)
4) தேவையான நிதிவளங்கள் (Financial resources) (4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1) சமகாலத்தில் காணப்படும் போட்டி நிலைமை.
2) போட்டியாளர்களும் மற்றும் அவர்களது பலங்களும்
3) போட்டி நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்குத் தன்னிடமுள்ள பலங்களும் பலவீனங்களும்.
4) சந்தையில் பிரவேசிப்பதிலுள்ள தடைகள் அதாவது கிரயம், காலம், தொழினுட்பம், ஆக்கவுரிமைப் பத்திரம், வியாபாரக்குறி போன்றவை

(2×1 = 02 புள்ளிகள்)

5. (அ) **செயற்பாட்டுத்திட்டமொன்றின் முக்கியத்துவம்**

1) எதிர்வரும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக முன்னரே விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
2) உற்பத்திப் பொருளின் தரத்தினை மேம்படுத்தக் கூடியதாக இருத்தல்.
3) உற்பத்திக் கருமங்களின்போது ஏற்படுகின்ற வீண்விரயங்கள், தாமதங்களைக் குறைத்துக்கொள்ள முடிதல்.
4) உற்பத்தி அலகொன்றின் கிரயத்தை முன்னரே உறுதிப்படுத்திக் கொள்ள முடிதல்

(4×1/2 = 02 புள்ளிகள்)

(ஆ) மொத்த நிலையான கிரயம்
செயற்பாட்டுச் செலவுகள்
மொத்தத் தொழிற்படு மூலதனம் (2×1 = 02 புள்ளிகள்)